# பூந்தமல்லி வரை மெட்ரோ நிலம் எடுப்பு பணி துவக்கம்

சென்னை, மார்ச் 3–

கலங்கரை விளக்கத்தில் இருந்து பூந்தமல்லி வரை, மெட்ரோ ரயில் பாதை அமைக்க, நிலம் கையகப் படுத்தும் பணி துவங்கி உள்ளது.



சென்னை, மெட்ரோ ரயில், இரண்டாவது திட்டம், 79 ஆயிரத்து, 961 கோடி ரூபாய் செலவில், மூன்று வழித்தடங்களில், 118.9 கி.மீ.,க்கு, ரயில் பாதை அமைக்கப்பட உள்ளது.

மாதவரம் – சிறுச்சேரி சிப்காட், 45.8 கி.மீ., மாதவரம் – சோழிங்கநல்லூர், 47 கி.மீ., கலங்கரை விளக்கம் – பூந்தமல்லி, 26.1 கி.மீ., ஆகிய பாதைகள், இந்த திட்டத்தில் அமைக்கப்பட உள்ளன.

இத்திட்டத்தில், கலங்கரை விளக்கம் – பூந்தமல்லி இடையே, 30 நிலையங்கள் அமைய உள்ளன.

இதற்கான, நிலம் கையகப்படுத்தும் பணிகள் துவங்கப்பட்டுள்ளன.

பூந்தமல்லி மெட்ரோ பணிமனை முதல், போரூர் வழியாக வடபழனி வரை உள்ள, நிலையங்களுக்கான இடம் கையகப்படுத்துவதற்கு, 221 பேருக்கு அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது.

இந்த நில உரிமையாளர்கள், சம்பந்தப்பட்ட மாவட்ட நில எடுப்பு அலுவலர் அலுவலகத்தில், ஏப்., 2ம் தேதி, காலை, 11:00 மணிக்கு ஆஜராகி, ஆவணங்கள் மற்றும் ஆட்சேபனைகளை தெரிவிக்கலாம் என, தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முழு வரைபடம்!

மெட்ரோ ரயில், இரண்டாவது திட்டத்தில், முதல்கட்டமாக, மாதவரம் – சோழிங்கநல்லூர், மாதவரம் – சி.எம்.பி.டி., இடையே, 52.1 கி.மீ., பாதைகள் அமைக்கப்பட உள்ளன. இரண்டாம் திட்டத்திற்கான பாதைகள் அமைக்க, முழுமையான வரைபடத்தை, மெட்ரோ ரயில் நிர்வாகம் நேற்று வெளியிட்டுள்ளது.